# DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

## CC. No.11/2018

Police Station : - Kadampuliyur P.S

Deposition of Witness prosecution- LW.3 / PW.3

| Name | புஷ்காந்தி | Taluk | பண்ருட்டி |
|---|---|---|---|
| Husband's Name | பிரகாஷ் | Village | |
| Age | | Calling | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 27.04.2026 அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2, திரு. லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(A1 to A3 present)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி.H.ஹலிமா பீவி WHC 937 அவர்கள் அடையாளம் காட்டினார்.

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது சிறுவத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அசா1, அசா2 மற்றும் பட்டியல் சாட்சி தனஞ்செயன் மற்றும் ஆஜர் எதிரிகளையும் தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆஜர் எதிரிகள் எனக்கு பழக்கமானர்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் எங்கள் ஊர் 2 வது தெருவைச் சேர்ந்த தனஞ்செயன் மனைவி வனிதா என்பவரது வீட்டிற்கும் பக்கத்து வீட்டைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் ரமேஷ் என்பவரது வீட்டிற்கும் வீட்டுமனை சம்பந்தமாக முன் விரோதம் உள்ளது என்றும், அதன் காரணமாக அவரது பக்கத்து வீட்டை சேர்ந்த கிருஷ்ணன் மகன் ரமேஷ், கிருஷ்ணன் மனைவி மகேஸ்வரி, ரமேஷ் மனைவி உமா மகேஸ்வரி ஆகிய மூன்று பேர்களும் கடந்த 24.11.2017ம் தேதி காலை சுமார் 08.30 மணியளவில் தனஞ்செயன் அவரது மனைவி வனிதா என்பவரும் அவங்க வீட்டில் இருந்த போது கிருஷ்ணன் மகன் ரமேஷ்

என்பவர் வனிதா வீட்டின் முன்பு கத்தியை எடுத்து வந்து வனிதாவை பார்த்து தேவடியா, குச்சிகாரி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று வெட்ட வந்தார் என்றும், பிறகு அவரது மனைவி உமா மகேஸ்வரி என்பவர் வனிதாவின் தலை முடியை கையால் பிடித்து அடித்தார் என்றும், வனிதாவை விபச்சாரம் செய்கிறாய் என்று சொன்னார் என்றும், ரமேஷ் வனிதாவின் தலைமுடியை கையால் பிடித்து கீழே தள்ளி வயிற்றில் எட்டி காலால் பலமுறை உதைத்தார் என்றும், அதை தடுக்க போன அவரது கணவர் தனஞ்செயனை கையால் அடித்தார் என்றும், ரமேஷ் மீண்டும் வனிதாவின் வலது கையில் அடித்து ரத்த கட்டு உண்டாக்கினார் என்றும், ரமேஷ் வனிதாவின் முதுகில் அடித்தார் என்றும், மகேஸ்வரி என்பவர் வனிதாவின் தலைமுடியை பிடித்து கையால் இடது கண்ணத்தில் அறைந்தார் என்றும். பிறகு அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து வனிதாவின் புடவையை பிடித்து இழுத்து மானபங்கம் படுத்தினார்கள் என்றும், இந்த சண்டையை போய் விலக்கினால் எங்களிடம் தகராறு செய்வார்கள் என்பதால் நாங்கள் யாரும் போய் கேட்கவில்லை என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் பழக்கமானவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பற்றுவதாற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை**

DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No.11/2018

Police Station : - Kadampuliyur P.S

Deposition of Witness prosecution- LW.5 / PW.4

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜவர்மன் | Taluk | பண்ருட்டி |
| Father's Name | சிவப்பிரகாசம் | Village | |
| Age | | Calling | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 27.04.2026 அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2, திரு.லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(A1 to A3 present)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி.H.ஹலிமா பீவி WHC 937 அவர்கள் அடையாளம் காட்டினார்.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது சிறுவத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கோழி வியாபாரம் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி மண்ணாதன் என்பரை தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் என் கையொப்பம் இல்லை. மேற்படி ஆவணத்திலுள்ள சாட்சி கையொப்பங்கள் யாருடையது என்று எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாகவும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆவணம் சம்மந்தமாகவும் எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் எனக்கு பழக்கமானர்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் கடந்த 29.11.2017 அன்று காலை சுமார் 07.00 மணியளவில் காடாம்புலியூர் காவல் உதவி ஆய்வாளர் என் முன்பும் மண்ணாதன் முன்பும் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் மேற்படி பார்வை மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு

தற்போது ஆஜர் எதிரிகள் பழக்கமானவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பற்றுவதாற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை**

DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No.11/2018

Police Station : - Kadampuliyur P.S

Deposition of Witness prosecution- LW. 2 / PW.5

| Name | தனஞ்செயன் | Taluk | பண்ருட்டி |
|---|---|---|---|
| Father's Name | கலியமூர்த்தி | Village | |
| Age | | Calling | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 27.04.2026 அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2, திரு.லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(A1 to A3 present)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி.H.ஹலிமா பீவி WHC 937 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிறுவத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். அசா1 வனிதா எனது மனைவி. அசா2 தனம், அசா3 புஷ்காந்தி எனது ஊரைச்சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகள் எனது ஊரைச்சேர்ந்தவர்கள். சுமார் 8 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை வேளையில் (தேதி மாதம் தற்போது ஞாபகம் இல்லை) நானும் எனது மனைவியும், எங்கள் வீட்டில் இருந்தபோது எங்கள் வீட்டு தெருவில் 10க்குமேற்பட்ட கும்பலாக சண்டை போடும் சத்தம் கேட்டு நாங்கள் வெளியே சென்று பார்த்தபோது கும்பலில் இருந்த யாரோ சிலர் எங்களை அசிங்கமாக திட்டி தாக்கிவிட்டு அங்கிருந்த ஓடிவிட்டார்கள். மேற்படி கும்பலாக சண்டை போட்ட நபர்கள் யார் என்றும், எங்களை அசிங்கமாக திட்டி தாக்கிய நபர்கள் யார் என்றும் எதற்காக அவ்வாறு செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. மேற்படி பண்ருட்டி அரசு மருத்துவனையில் எனது மனைவி புறநேயாளியாக சிகிச்சை மேற்கொண்டார். எனக்கு வெளிப்புற காயம் இல்லாததால் நான் சிகிச்சை மேற்கொள்ளவில்லை. இதை தவிர இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆஜர் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதனமாகிவிட்டேன் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் எங்கள் வீட்டின் அருகில் எங்கள் மனையில் எங்களது வாகனத்தை நிறுத்தினோம் என்றும், அதன் காரணமாக அங்கே பக்கத்து வீட்டை சேர்ந்த மகேஸ்வரி, ரமேஷ், உமா மகேஸ்வரி ஆகிய மூவரும் வேலி அடைத்து தண்ணீர் பம்ப் வைத்து எங்களை மிகவும் பல நாட்களாக தொந்தரவு செய்து வந்தார்கள் என்றும், மேலும் அவர்கள் வல்கரான வார்த்தையில் எங்களை திட்டினார்கள் என்றும் கடந்த 24.11.2017 அன்று காலை சுமார் 8.30 மணி அளவில் நானும் என் மனைவி வனிதாவும், எங்கள் வீட்டில் இருந்தபோது ரமேஷ் என்பவர் என் வீட்டின் முன்பு கட்டி எடுத்து வந்து என் மனைவியை பார்த்து அசிங்கமாக திட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று வெட்ட வந்தார் என்றும், பிறர் அவரது மனைவி உமா மகேஸ்வரி என்பவர் எனது மனைவியின் முடியை கையால் பிடித்து அடித்தார் என்றும், மேலும் இந்த விபச்சாரம் செய்கிறேன் என்று கூறினார் என்றும் மேலும் ரமேஷின் தலைமுடியை கையால் பிடித்து கீழே தள்ளி வயிற்றில் எட்டி காலால் பலமுறை உதைத்தார் என்றும், அதை தடுக்க வந்த என்னை கையால் அடித்தார் என்றும், ரமேஷ் எனது வலது கையில் அடித்தார் என்றும், அதில் எனக்கு ரத்தக்கட்டு ஏற்பட்டது என்றும், ரமேஷ் என் முதுகில் அடித்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றும், மேலும், மகேஸ்வரி என் மனைவியின் தலை முடியை பிடித்து கையால் இடது கன்னத்தில் அறைந்தார் என்றும், மேலும் அவர்கள் மூவரும் சேர்ந்து என் மனைவியின் புடவையைப் பிடித்து இழுத்து மானபங்கம் படுத்தினார்கள் என்றும், இந்த சண்டை அங்கு இருந்த எங்கள் ஊரைச் சேர்ந்த புஷ்காந்தி மற்றும் தனம் ஆகியவர்களுக்கு தெரியும் என்றும், மேற்படி என் மனைவி அவரது உயிருக்கு பயந்து எங்கள் ஊருக்கு வராமல் அவரது தாய் வீட்டிற்கு சென்று தங்கிவிட்டார் என்றும், கடந்த 29.11.2017 அன்று மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி எனது மனைவி காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகளுடன் வழக்கு சம்பந்தமாக சமாதனமாகிவிட்டதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பற்றுவதாற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை**